10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Eth...

குரல் 01 அதிர்வு 245 புதன்கிழமை ஜனவரி 24 2018 ethirolimedia@gmail.com 021224

## போராட்டம் ஒரு வருடம்

வவுனியா, ஜன.24

வவுனியாவில் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளினால் மேற்கொள்ளப்பட்ட சாகும் வரையிலான உணவு தவிர்ப்புப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு நேற்றுடன் ஒருவருடம் பூர்த்தியானது. இதனை முன்னிட்டு காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தினை மேற்கொண்டனர்.

06▶

## ஐ.தே.க. வென்றால் ஆளுநர்கள் மாற்றம்

ஏறாவூர், ஜன.24

"உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி வெற்றி பெற்றால் வடக்கு-கிழக்கு உள்ளிட்ட அனைத்து மாகாணங்களிலும் ஆளுநர்கள் உடனடியாக மாற்றப்படுவார்கள்" என்று கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ஹாபீஸ் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

ஏறாவூரில் இடம்பெற்ற ஐக்கிய தேசிய கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்

06▶



# தமிழீழம் கேட்பதில் தவறேதும் இல்லை

## சந்திரிகாவின் சுடலைஞானம்

கொழும்பு, ஜன.24

" தமிழ் மக்கள் தமிழீழம் கோருவது நியாமான ஒன்றுதான்.

இலங்கையில் நீண்ட காலமாக தமிழ் மக்கள் பெரும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வந்துள்ளனர். இப்படியான நிலையில் அவர்கள் தனிநாடு கோருவதில் எந்தவிதத் தவறும் கிடையாது" இவ்வாறு தெரிவித்துள்ளார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"பெரும்பான்மை இன சிங்கள மக்கள் வாழும் பகுதிகளில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தி தமிழ் மக்களுக்கு

06▶



ஊவா முதலமைச்சர்

## கைது!

பதுளை, ஜன.24

பதுளை மகளிர் பாடசாலையின் அதிபரை மண்டியிட வைத்த சம்பவம் தொடர்பில் பதுளை பொலிஸ் நிலையத்தில் ஆஜரான ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க கைதுசெய்யப்பட்டார். பின்னர் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இதன்போது, பதுளை நீதவான் நீதிமன்ற நீதிபதி நயந்த சமரதுங்க ஊவா மாகாண முதலமைச்சரை இரண்டு இலட்ச ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதித்தார்.

பதுளை தமிழ் மகளிர் பாடசாலையின் பெண் அதிபர் மண்டியிட்ட சம்பவம் தொடர்பில், வாக்கு மூலம்

06▶

## இலங்கையின் சதிக்கு இந்தியாவும் உடந்தை!

அமைச்சர் அனந்தி குற்றச்சாட்டு



யாழ்ப்பாணம்,ஜன.24

"வடக்கு மாகாண சபையின் நிர்வாக எல்லைக்குள் நடைபெறும் பொது நிகழ்வுகள், அபிவிருத்தி நடவடிக்கைகள் என்பவற்றில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண அரசை முற்றிலுமாகப் புறக்கணித்து அதுகுறித்தான முன்னெடுப்பு

06▶

## பேரம் அம்பலம்

யாழ்ப்பாணம், ஜன.24

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 15 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் 2 கோடி ரூபா நிதி ஒரு நாடாளு

06▶



## ஊரெழுவில் விபத்து இளைஞன் சிதறிப் பலி

யாழ்ப்பாணம், ஜன.24

யாழ். ஊரெழு பலாலி பிரதான வீதியில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை பிற்பகல் மோட்டார் சைக்கிளும் சிறியரக ஹன்ரர் வாகனமும் நேருக்கு நேர் மோதியதில், 25 வயதான

06▶

## பிணைமுறி அறிக்கை நாடாளுமன்றில்

கொழும்பு, ஜன.24

மத்திய வங்கி பிணைமுறி மோசடி விவகாரம் பற்றிய ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையும், கடந்த அரசின் காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பாரிய நிதி மோசடிகள் தொடர்பில் விசாரணை

06▶



உங்களுடைய இலக்கங்களை எங்களுக்கு வழங்குங்கள்

உங்களுடைய வியாபாரத்துடன் வாடிக்கையாளர்களை தொடர்புபடுத்துவோம்

பல்வேறு வழிகளில் உங்களின் தகவல்களை அனுப்பலாம்

- த.பெ.எண் 2333 கொழும்பு முகவரிக்கு தபால் அட்டை அனுப்பவும்.
- இ-மெயில் info@rainbowpages.lk
- rainbowpages.lk சென்று Register your business இல் பதிவு செய்யவும்.
- 0712399399 இலக்கத்துக்கு sms,viber or whatsapp இற்கு மெசேஜ் பண்ணவும்
- விபரங்களை 011 2391888 பெக்ஸ் செய்யவும்.

SLT ரெயின்போ பேஜஸில் இலவசமாக பதிவு செய்து வியாபாரத்தை விரிவுபடுத்துங்கள்.

SLT RAINBOW PAGES

Print & Digital Directories

உங்களின் வளமான வியாபாரத்திற்கு கைகொடுக்கும் SLT ரெலிகொம்.

www.relianceinternationalms.com



அவுஸ்திரேலியாவில் குடியுரிமை விசா, மாணவர் விசா மற்றும் வியாபார விசா என்பவற்றைப் பெற்றுக்கொள்ள

RELIANCE INTERNATIONAL MIGRATION SERVICES

Australian Office :
Address: No: 9, Quarters Blvd, Cranbourne West , VIC 3977
Tel : 61459450000

Sri Lanka office :
Contact Swarna
33/1 Kirillapone Avenue
Colombo 5, Sri Lanka.
Mobile : 0773112240 , 5637668


Consultation by appointment only,
Tel: 0459450000
Email: relianceinternationalms@gmail.com
rimigrationservices@bigpond.com
Web: www.relianceinternationalms.com



MIA
Member of Migration Institute of Australia


Contact us for consultation with
Thilinika Wijesinghe
Registered Migration Agent
(MARN: 1463863 MIA: 8531)

எதிரொலி
Ethiroli
புதன் 24 ஜனவரி 2018





# பிரிட்டனில் கிட்டுவின் நினைவேந்தல்



லண்டன்,ஜன.24

வங்கக்கடலில் காவியமான கேணல் கிட்டு, லெப்டினன் கேணல் குட்டி சிறி உட்பட பத்து வேங்கைகளின் 25 ஆம் ஆண்டு நினைவு வணக்க நிகழ்வு தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவின் ஏற்பாட்டில், பிரிட்டனில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 6மணிக்கு நடைபெற்றது. ஏராளமானோர் கலந்து கொண்ட இந்த நினைவேந்தலில், கலைநிகழ்வுகள், நினைவுரைகள் என்பனவும் இடம்பெற்றன. (அ)

# அனுமனின் பாதங்கள்? மஸ்கெலியாவில் ஆய்வு



ஹட்டன், ஜன,24

மஸ்கெலியா காட்மோர் பிரதேசக் காட்டுப்பகுதியிலுள்ள பாறையில் கண்டிபிடிக்கப்பட்ட இரண்டு பாதச்சுவடுகளையும் கண்டி தொல்பொருள் ஆய்வு நிலையத்தின் பாலித அத்தநாயக்க தலைமையிலான குழு நேற்று ஆய்வு செய்துள்ளது.

அந்தப் பாதச்சுவடுகளை புகைப்படம் எடுத்ததுடன், அவற்றின் அகலம், உயரம், நீளம் போன்ற பரிமாணங்களையும் தொல்பொருள் ஆய்வுக் குழுவினர் அளவீடு செய்தனர். இந்தப் பாதச்சுவடுகள் தொடர்பாக உடனடியாக எதுவும் கூற முடியாது என்றும், கண்டிக்கு சென்று மேலும் இது தொடர்பாக ஆராய்ந்த பின்னரே முழுமையான அறிக்கையொன்றைத் தயாரிக்க முடியும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, இந்தப் பாதங்கள் இந்துக் கடவுளான அனுமானின் பாதச்சுவடுகள் என தெரிவித்து பிரதேச மக்கள் பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.



இது குறித்து பிரதேச வாசி ஒருவர் கருத்து தெரிவிக்கையில், "கடந்த 1ஆம் திகதி என் கனவில் அனுமார் தோன்றிக் காட்சியளித்தார். அவரே இந்தப் பிரதேசத்தில் தான் மறைந்திருப்பதை வெளிப்படுத்தினார். அதனைத்தொடர்ந்து குருக்களின் உதவியோடு இந்தப் பிரதேசத்தில் தேடுதல் மேற்கொண்ட போதே பாதங்கள் தென்பட்டன" எனத் தெரிவித்தார்.(அ)

# கூட்டமைப்பினர் அரசின் பங்காளிகளே!

## சாடுகிறார் மன்னார் வேட்பாளர் சகாயம்

மன்னார், ஜன.24

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்தின் நிகழ்ச்சிநிரலின்படி, அதன் பங்காளியாகச் செயற்படுவதால் வடக்கு கிழக்கில் காணாமல் போனோர் போன்ற தமிழ் மக்களின் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெறாமல் இருக்கின்றனர்" என மன்னார் பிரதேச சபைக்கான அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் முதன்மை வேட்பாளர் அ.சகாயம் தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபை தேர்தலை முன்னிட்டு அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் பொது கூட்டம் மன்னார் நகர சபை மண்டபத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. கட்சியின் தலைவர் கஜேந்திர குமார் பொன்னம்பலம், செயலாளர் எஸ். கஜேந்தின் உட்பட கட்சி வேட்பாளர்கள், பொது மக்கள் எனப் பலர் இதில் கலந்து கொண்டனர்.

இதன்போது இக் கட்சியின் மன்னார் பிரதேச சபை முதன்மை வேட்பாளர் அ.சகாயம் தொடர்ந்து பேசுகையில்,

"நான் மன்னார் பிரதேச சபையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதியாக இந்தச்சபையின் முன்னாள் உப தலைவராக இருந்தேன்.

நான் பிரதேச சபை உறுப்பினராக இருந்த போது காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம் அரசியல் கைதிகள் விடுதலை என்பவற்றில் அக்கறை காட்டினேன். இது விடயமாக நான் தமிழ்ப் பகுதியின் எட்டு மாவட்டங்களின் இணைப்பாளராகவும் இருந்து வந்தேன்.

மக்களின் கருத்துக் கணிப்புக்களையும் , அவர்களின் எண்ணங்களையும் நோக்கிய போது எமது அரசியல் தலைவர்கள் தமிழ் மக்களின் எண்ணங்களுக்கு மாறாக விலை போனதைக் கவனிக்கக்கூடியதாக இருந்தது.

2010 ஆம் ஆண்டு அன்றைய அமைச்சர் கோத்தபாய 'வடக்கு கிழக்கில் காணாமல் போனவர்கள் யாரும் இல்லை' எனத் தெரிவித்திருந்தார். இதற்கு சவாலாக நாங்கள் வடக்கு கிழக்கு பகுதிகளில் திரட்டிய விபரத்திண்படி 3737 பேர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள் என்பதை ஆதாரத்தோடு ஒப்படைத்தோம்.

எங்களுடைய கொள்கைக்கும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் கொள்கைக்கும் ஓர் இணக்கம் காணப்பட்டதால்தான் நான் தமிழ் தேசிய கூட்டமைப்பிலிருந்து விலகி இந்தக் கட்சியுடன் இணைந்து கொண்டேன்.

காணாமல் போனவர்கள் சம்பந்தமாக பல இடங்களில் போராட்டங்கள் நடத்தப்பட்ட வருகின்றபோதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன? இது சம்பந்தமாக நான் இவர்களுடன் விவாதிக்க வேண்டுமானால் அதற்கும் தயாராக இருக்கின்றேன்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் எதிர் கட்சித் தலைவர் பதவியைப் பெற்றுக் கொண்டபோது மகிழ்ச்சியடைந்தவர்களில் நானும் ஒருவன்.

ஆனால் நடந்ததோ அரசியல் இணக்கப்பாடு. அரசின் நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பது இவர்களுடைய குழுதான். அரசியல் கைதிகளின் விடுத்லை, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் எல்லாம் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடுகளால் கிடப்பில் போடப்பட்டு விட்டன" என்றார்.(அ)

# தேங்காய் விலையேற்றம் உண்மையான காரணம் இதுதான்






விலைவாசியைப் பொறுத்தவரை இந்த ஆட்சிக்கும் மஹிந்தவின் ஆட்சிக்கும் இடையில் பாரிய வித்தியாசம் ஒன்றும் இல்லை. இந்த ஆட்சியில் பல்பொருட்களுக்கான விலைகள் அதிகரித்துள்ளபோதிலும் தேங்காய் விலை அதிகரித்திருப்பது தான் கடும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

வரட்சியின் மீது பழியை போட்டு விட்டு அரசு மெல்ல நழுவுகிறது. வரட்சியால் தெங்கு முக்கோண வலையத்தில் மூன்று லட்சம் தென்னை மரங்கள் அழிந்துள்ளன. இந்த விலையேற்றத்துக்கு வரட்சியின் பங்களிப்பு ஓரளவு தான். ஆனால், விலையேற்றத்துக்கான உண்மையான காரணம் இதுவல்ல.

வெளிநாட்டு கம்பனிகள் சில அவர்களின் உற்பத்திகளுக்காக மாதாந்தம் லட்சக் கணக்கில் தேங்காய்களை கொள்வனவு செய்வதுதான் உண்மையான காரணமாம்.

அவற்றுள் ஒரு கம்பனி மாத்திரம் மாதாந்தம் 10 லட்சம் தேங்காய்களை கொள்வனவு செய்கிறதாம். பல அரசியல்வாதிகளின் தோட்டங்களில் இருந்து அந்தக் கம்பனிகளுக்கு தேங்காய்கள் செல்வதால்தான் இந்தப் பிரச்சினை வேறு பக்கம் திசை திருப்பப்படுகின்றது என்பது இப்போது புரிகிறதா?

எதிரொலி Ethiroli
புதன், 24 ஜனவரி 2018 ethirolimedia@gmail.com

## நீதிக்காக யார் குரல் கொடுப்பார்?

பதுளையில் மகளிர் கல்லூரி அதிபர் ஒருவரை முழந்தாளிடச் செய்த சம்பவம் இலங்கையில் பல புதிய முன்னுதாரணங்களை தந்துகொண்டிருக்கிறது. ஊவா மாகாண முதலமைச்சர் தன் அதிகாரத்தின் எல்லையை அத்துமீறிப் பிரயோகித்து, ஒரு பாடசாலையின் அதிபரை, மாணவர்களைப் போல முட்டுக்காலில் இருத்தி தண்டித்தமை அரசியல் வட்டாரங்களை ஒரு கலக்குக் கலக்கிக் கொண்டிருக்கிறது. இந்தச் சம்பவத்தை முதலில் ஜே.வி.பியே வெளிக்கொணர்ந்தது. ஆயினும் அப்படி எந்தச் சம்பவமும் நடக்கவில்லை என்று முதலமைச்சர் சத்தியம் செய்தார். ஊடகங்களும், ஜே.வி.பியும் பொய் சொல்வதாகப் பாய்ந்தன. அவர்கள் சொன்னதையே அட்சரம் பிசகாமல் வரிக்கு வரி ஒப்புவித்தார் பாதிக்கப்பட்ட அதிபர். இதனால் அரசியல் காழ்ப்புணர்ச்சியாலேயே இப்படி ஒரு சம்பவம் இட்டுக்கட்டப்பட்டதாக ஆரம்பத்தில் பலரும் நம்பினர்.

ஆயினும் அதன் பின்னர், அதிபருக்குரிய பாதுகாப்பினை சில அரசியல் கட்சிகள் ஏற்படுத்திக் கொடுத்த பின்னர், பாதிக்கப்பட்ட அதிபர் நடந்த உண்மைகளைக் கண்ணீர் மல்க வீடியோப் பதிவொன்றில் கக்கினார். அவ்வளவுதான். விவகாரம் மீண்டும் சூடு பிடித்தது. 'ஊவா முதலமைச்சரின் பதவியைப் பறிப்பதோடு அவரை அரசியல் அரங்கில் இருந்தே அகற்ற வேண்டும்' என்ற குரல்கள் இலங்கையின் நாலாபுறத்தில் இருந்தும் எழத் தொடங்கிவிட்டன. இந்த நிலையில் தன் மீதான விசாரணைக்கு வசதியாக, தான் வகித்து வந்த கல்வியமைச்சுப் பொறுப்புக்களை ஊவா முதலமைச்சர் உதறினார். எனினும் மேலிடத்து அழுத்தம் காரணமாகவே அவர் அவ்வாறு அமைச்சுப் பொறுப்பை கைவிட்டதாகவும் கூறப்படுகின்றது.

உண்மையைப் பாதிக்கப்பட்ட அதிபர் போட்டுடைத்ததால், அவருக்குச் சார்பாக ஊவா மாகாணத்தில் பாடசாலை ஆசிரியர்களும், மாணவர்களும் போராட்டங்களில் ஈடுபடத் தொடங்கிவிட்டனர்.

குறித்த அதிபர் மீதான அச்சுறுத்தல், தனியே பதுளை மகளிர் கல்லூரி அதிபருக்கு மட்டுமானது அல்ல. அது ஒட்டு மொத்த கல்விச் சமூகத்துக்குமே விடுக்கப்பட்ட மிரட்டல். இன்று இந்தச் சம்பவத்தை ஆசிரிய சமூகமும், மாணவர்களும் கண்டிக்கத் தவறினால், அது அதிகாரத்தில் இருப்பவர்களை இன்னும் உற்சாகப்படுத்தும். ஆசிரியர்களையும் , அதிபர்களையும் என்ன செய்தாலும் கேட்பதற்கு ஒரு நாதியிருக்காது என்ற துணிச்சலையும் கொடுக்கும். எனவே இந்தத் தருணத்தில் பாதிக்கப்பட்ட பதுளை அதிபருக்கு ஆதரவாகக் குறைந்த பட்சம் தமிழ்ப் பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்களும், மாணவர்களும் அடையாள எதிர்ப்பையாவது பதிவு செய்வது அவசியம்.

என்னென்னவோ பிரச்சினைகளுக்கெல்லாம் வீதிகளில் இறங்கிப் போராடுகின்ற ஆசிரியர் சமூகம், தங்களில் ஒருவரின் பாதிப்புக்காக போராட வேண்டியது, நீதி கேட்க வேண்டியதும் எதிர்காலத்தில் அவர்களின் இருப்புக்கே உதவும். ஜல்லிக்கட்டுக்காகவும், சம்பள உயர்வுக்காகவும், இடமாற்றத்துக்காகவும் எத்தனை போராட்டங்களை ஆசிரியர்கள் நடத்தியிருப்பார்கள். அதிபர்களின் இடமாற்றத்தைத் தடுத்து நிறுத்தக் கோரி எத்தனை தரம் மாணவர்களை வீதிக்கு இறக்கியிருப்பார்கள். அப்படியெல்லாம் செய்தவர்கள், பல மாணவர்களின் கல்விக்கு ஒளி கொடுத்து, அதிபராகி, ஒரு முதலமைச்சரின் அதிகாரத்தனமான சிபார்சையே மதிக்காமல் நீதியை நிலை நாட்ட முயன்றமைக்காக, அவமானப்படுத்தப்பட்ட ஒருவருக்காக குரல் கொடுக்க வேண்டும். அப்போதுதான் நாளை ஏனைய ஆசிரியர்களுக்கோ, அதிபர்களுக்கோ இவ்வாறான பிரச்சினைகள் நிகழும் போதும், தனியே அந்தப் பாடசாலையில் மட்டுமே ஆதரவென்ற நிலை மாறி, இலங்கை முழுதும் அதற்கான நீதிக் குரல் எழும். அவ்வாறு சக கல்விச்சமூகம் சார்ந்த ஒருவருக்காக நீதி கோரி சிறு ஆதரவைக் கூட தெரிவிக்காது இருப்போமானால், நாளை இங்குள்ள ஆசிரியர்களுக்கும் நீதி கேட்க யாரும் இருக்கப் போவதில்லை.

"முதலில் அவர்கள் யூதர்களைத் தேடி வந்தார்கள்
நான் அவர்களுக்காகக் குரல் கொடுக்கவில்லை
ஏனென்றால் நான் யூதனில்லை
பின்னொரு பொழுதில்
கம்யூனிஸ்ட்டுக்களைத் தேடி வந்தார்கள்
அப்போதும் நான் குரல் கொடுக்கவில்லை
ஏனென்றால் நான் கம்யூனிஸ்ட் இல்லை
அவர்கள் தொழிலாளர்களையும் தேடி வந்தார்கள்
நான் அவர்களுக்காகவும் குரல் கொடுக்கவில்லை
ஏனென்றால் நான் தொழிலாளி இல்லை
கடைசியில்
அவர்கள் என்னைத் தேடி வந்தார்கள்
அப்போது எனக்காகக் குரல் கொடுக்க
எவருமே இருக்கவில்லை."

– மார்ட்டின் நியமொல்லர்
(ஜேர்மனியில் ஹிட்லரின் ஆட்சியில் வதைபட்ட கவிஞர்

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# சரவணபவன் ஒரு சருகுப்புலி

## சுரேஷ் கிண்டல்





யாழ்ப்பாணம், ஜன.24

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் ஒரு சருகுப்புலி. அவர் ஒரு அரசியல்வாதியல்ல, நல்லதொரு வியாபாரி. அதனை தவிர்த்துப் பார்த்தால் அவர் ஒன்றுமே இல்லாதவர். ஆகையினால் அவரது மிரட்டல்களுக்கு நாம் அஞ்சத் தேவையில்லை. அவ்வாறு அஞ்சுகின்ற நிலைமையில் நாங்களும் இல்லை"

- இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.ஆர்.எல்.எப் அமைப்பின் தலைவருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரகள் இரண்டு கோடியைப் பெற்றதாக கருத்து வெளியிட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனுக்கு சிக்கல்கள் வருமென்று நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கருத்து வெளியிட்டிருந்தார்.

அவரது கருத்து தொடர்பில் யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியிலாளர் சந்திப்பின் போது சுரேஷ்பிரேமச்சந்திரனிடம் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலையே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்ததற்காக இரண்டு கோடி ருபா நிதி அரசாங்கத்தால் வழங்கப்பட்டிருப்பதாக நாடாளுமன்றத்திலேயே சிவசக்தி ஆனந்தன் தெரிவித்திருக்கின்றார்.

அவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்தன் பேசுகின்ற போது ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் எங்கே போனார்கள். அங்கு இருந்தார்களாயின் என்ன செய்து கொண்டு இருந்தார்கள்? அங்கு ஏன் இதனை மறுதலிக்கவில்லை? அங்கு பேசாமல் இருந்து விட்டு இங்கு வந்து வெவ்வேறு கருத்துக்களை ஏன் வெளியிடுகின்றனர்?

ஆகவே சரவணபவன் போன்றவர்களின் மிரட்டல்களுக்கு நாங்கள் அஞ்சப் போவதில்லை. அவரை ஒரு சருகுப் புலி போலத் தான் பார்க்கிறோம்.

அத்துடன் அவர் ஒரு வியாபாரி. அதனை தவிர்த்து பார்த்தால் அவர் ஒன்றுமே இல்லாதவர். அவருடைய மிரட்டல்களுக்கு அஞ்சும் நிலையில் நாங்கள் இல்லை" எனவும் அவர் கூறினார். (அ)

## முல்லையில் நால்வர் கைது

முல்லைத்தீவு, ஜன.24

முல்லைத்தீவில் தேர்தல் சட்டத்தை மீறிய நான்கு பேர் நேற்று முன்தினம் பிற்பகல் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தேர்தல் பிரசாரச் சுவரொட்டிகளை சட்ட விரோதமாக எடுத்துச்சென்ற குற்றத்தின் அடிப்படையில் முள்ளியவளை பகுதியில் ஒருவரும், விசுவமடு மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேசங்களில் ஏனைய மூன்று சந்தேகநபர்களும் கைதாகியுள்ளனர்.

தேர்தல் சட்டத்தை மீறி செயற்படுபவர்களைக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த விசேட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார். (அ)

## "அப்படி யாருமில்லையே!"




கொழும்பு, ஜன.24

"பாகிஸ்தானில் முஹம்மட் ஷரீப் என்ற பெயரில் பிரதமர் ஒருவர் இல்லை. அப்படியானால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அந்நாட்டிலுள்ள முதலாளி ஒருவருடனேயே தொலைபேசியில் கதைத்துள்ளார்" என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கிண்டலாகக் கூறியுள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள உரத் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு , பாகிஸ்தான் பிரதமரும் தனது அன்பருமான முஹம்மட் ஷரீபுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டதாகவும் அவர் உடனே அதனை அனுப்ப ஏற்றுக் கொண்டதாகவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார். இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கும் போதே மகிந்த ராஜபக்ச இவ்வாறு கிண்டலடித்துள்ளார்.

" நாட்டில் தற்பொழுது குறைந்த விலையில் மட்டுமல்ல, கூடிய விலை கொடுத்தும் உரத்தை வாங்க முடியாதுள்ளது. இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் பாகிஸ்தான் பிரதமரான முஹம்மட் ஷரீபுடன் கதைத்து உரத்தட்டுப்பாட்டை நீக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார். ஆனால் அப்படியான் பெயரில் அங்கு எந்தவொரு பிரதமரும் இல்லை. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தொர்டர்பு கொண்டவர் பாகிஸ்தான் பிரதமராக இருந்திருந்தால், நாட்டில் ஓரளவேனும் உரப் பற்றாக்குறை இல்லாமல் போயிருக்கும்" என்று மகிந்த தெரிவித்துள்ளார். (அ)





## கலாம் வருகையின் நினைவுகளில்...



யாழ்ப்பாணம், ஜன.24

இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதியும், விஞ்ஞானியுமான அப்துல் கலாம், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு வருகை தந்த நினைவுநாளை முன்னிட்டு, கல்லூரி அதிபர் ச.நிமலன் தலைமையில் மரநடுகை, நினைவுப் பேருரை என்பன நேற்று இடம்பெற்றன. (அ)

## இன்று நாளும் கோளும்

24.01.2018 புதன்கிழமை ஏவிளம்பி வருடம் தை மாதம் 11ஆம் நாள்
ஸப்தமி பி.ப. 12.14 மணி வரை | அசுபதி மு.ப. 04.37 வரை | குளிகை 10.30-12.00
இராகுகாலம் 12.00 - 01.30 | சுபநேரம் மு.ப. 09.30 - 10.30 | எமகண்டம் மு.ப. 07.30 - 09.00

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நஷ்டம் | நிறைவு | மறதி | தடை | வாழ்வு | பீடை | களிப்பு | பகை | சினம் | இன்பம் | துன்பம் | ஆதரவு |

# புலிகளின் சொத்துக்களை சுவிஸில் பதுக்கிய பிள்ளையான்

## சீ.யோகேஸ்வரன் எம்.பி குற்றச்சாட்டு





மட்டக்களப்பு, ஜன. 24

"விடுதலைப் புலிகளின் வைப்பகத்தில் இருந்த பெருமளவான பணமும், நகைகளும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியை சேர்ந்தவர்களினால் கொள்ளையிடப்பட்டு சுவிஸ் நாட்டில் பிள்ளையானால் பெரிய நகை மாளிகை திறக்கப்பட்டுள்ளது" என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ. யோகேஸ்வரன் குற்றம்சாட்டியுள்ளார்.

மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக்கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்பொதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.


"7 கோடி ரூபாவில் மட்டக்களப்பு பஸ் நிலையத்தினை கட்டிவிட்டு 40 அடியில் கட்-அவுட் வைத்தவர் பிள்ளையான். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குறுகிய காலத்தில் கிழக்கு மாகாணசபையில் ஆட்சி செய்தபோது கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் 12 கோடி ரூபாவில் பெரிய விவசாய பண்ணையினைக் கட்டியுள்ளார். கிழக்கு மாகாண முதலமைச்சராக பிள்ளையான் இருந்தபோது பிரதேச சபை மற்றும் மட்டக்களப்பு மாநகரசபையினை அவர்கள்தான் ஆட்சிசெய்தார்கள். மகிந்த ராஜபக்சவின் கைக்கூலியாக இருந்து அவர்களின் சின்னத்திலேயே போட்டியிட்டனர்.

2008 ஆம் ஆண்டு பிள்ளையான் முதலமைச்சராக ஆக்கப்பட்ட நிலையில், 2009ஆம் ஆண்டு போர் மௌனிக்கப்பட்ட நிலையில் அபிவிருத்தியடையாத பகுதியாக வடக்கு, கிழக்கு பகுதி காணப்பட்டதன் காரணமாக அப்பகுதியை அபிவிருத்தி செய்வதற்காக கோடிக் கணக்கான ரூபா பணம் மகிந்த ராஜபக்சவுக்கு சர்வதேச நாடுகளினால் வழங்கப்பட்டது.

இலவசமாக வழங்கப்பட்ட பணம் எல்லாம் தென் பகுதி அபிவிருத்திக்கு வழங்கப்பட்டது. கடனாக வழங்கப்பட்ட நிதியே வடக்கு, கிழக்குக்கு வழங்கப்பட்டது. பிள்ளையானுக்கு வழங்கப்பட்ட நிதியைச் சரியாக கையாண்டிருந்தால் பல அபிவிருத்தி திட்டங்கள் நடைபெற்றிருக்கும்.

கரடியானாறில் இருந்து விடுதலைப் புலிகளின் வைப்பகத்தில் இருந்த பெருமளவான பணமும், நகைகளும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியை சேர்ந்தவர்களினால் கொள்ளையிடப்பட்டு சுவிஸ் நாட்டில் பிள்ளையானால் பெரிய நகைமாளிகை திறக்கப்பட்டுள்ளது.

பலரின் பெயரில் சுவிஸ் வங்கிகளில் பணம் வைப்பிலிடப்பட்டுள்ளது. அவர் முதலமைச்சராக இருந்தபோது மட்டக்களப்பு மாவட்டத்தில் பல வீடுகளில் கொள்ளைகளும் நடத்தப்பட்டன. இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யவும் பயந்த நிலையிலேயே இருந்து வந்தனர். இவ்வாறான சூழ்நிலையிலேயே தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி ஆட்சியை நடத்தியது. பலரை காணாமல் ஆக்கியவர்கள்தான் இந்த தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியினர். அதற்கு தீவுச்சேனை என்னும் கிராமம் பதில் கூறும் இந்த நாட்டில் யுத்தத்தினால் பல்லாயிரக்கணக்கான மக்களையும், ஆயிரக்கணக்கான மாவீரர்களையும் இழந்துள்ளோம். இவையெல்லாம் வெறும் வீதிக்காகவும் அபிவிருத்திக்காகவும் இழந்த இழப்பு அல்ல. நாங்கள் இந்த நாட்டின் தேசிய இனம், பூர்வீக குடிகள், இந்த நாட்டில் சகல உரிமைகளையும் அனுபவிக்க வேண்டியவர்கள். இரண்டாம் தர பிரஜைகளாக தமிழர்களை வைத்திருப்பதற்கு அனுமதிக்கமுடியாது. அதன்காரணமாகவே எமது உறவுகள் ஆயுதம் ஏந்திபோராடி பல தியாகங்களை செய்துள்ளனர். எதற்காக அவர்கள் ஆயுதம் தூக்கிப்போராடினார்களோ அந்த நோக்கத்தினை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ச்சியான முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றது. நாங்கள் அரசாங்கத்துடன் ஒட்டிக் கொண்டிருக்கவில்லை" என்றும் அவர் தெரிவித்தார். (அ)



# வீட்டுக்குள் புகுந்த ஆறடி நீள முதலை

வவுனியா, ஜன.24

வவுனியா நெளுக்குளம் பகுதியிலுள்ள வீடு ஒன்றிற்குள் புகுந்த முதலை ஒன்று அப்பகுதியிலுள்ளவர்களினால் நேற்று அதிகாலை 3.30 மணியளவில் மடக்கிப் பிடிக்கப்பட்டது.

நெளுக்குளம் பொலிஸ் நிலையத்திற்கு அருகிலுள்ள வீடு ஒன்றுக்குள் நேற்று அதிகாலை ஆறு அடி நீளமான முதலை திடீரெனப் புகுந்து மறைந்து கொண்டது. இதனைத் தற்செயலாக அவதானித்த வீட்டு உரிமையாளர், அயலவர்களின் உதவியுடன் முதலையினை மடக்கிப்பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார். இதனால் பெரும் அனர்த்தம் ஒன்று தவிர்க்கப்பட்டுள்ளது.

தற்போது வவுனியாவில் உள்ள குளங்களின் நீர்வற்றத் தொடங்கியுள்ளதால், அங்கிருந்து முதலைகள் வெளியேறி வீடுகளை நோக்கியும், வயல்களை நோக்கியும் செல்வதாகக் கூறப்படுகின்றது. (அ)

# மூதாட்டி கொலையில் பொலிஸுக்கு சந்தேகம்

யாழ்ப்பாணம்,ஜன.24

யாழ்ப்பாணம் - மானிப்பாய், ஆனைக் கோட்டை வீதியில் வயோதிபப் பெண் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் பெரும் சந்தேகம் எழுந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் - மானிப்பாய் ஆனைக் கோட்டை வீதியில் உறவினர் ஒருவரின் உதவியுடன் தனிமையில் வாழ்ந்து வந்த 72 வயதுடைய ஜெகநாதன் சத்தியபாமா என்ற மூதாட்டியின் தலையில் அடிகாயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டிருந்தார். இவரது பெறாமகன் கிளிநொச்சியில் வசித்து வருகின்றார். வழமையாக பெறாமகன் வந்து பார்வையிட்டு செல்வதுடன், இவருக்கான உணவுகளை வேறு நபர்களிடம் ஏற்பாடு செய்து கொடுத்துள்ளார். அதேநேரம் இந்த மூதாட்டிக்கு பாதுகாப்பாக அவரது மைத்துனர் ஒருவர் வழமையாக இரவில் தங்குவது வழக்கம். இந்த நிலையிலேயே குறித்த கொலை இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போதும், கொலை நடைபெற்ற இடத்தில் கண்டெடுக்கப்பட்ட தடயப்பொருட்கள் தொடர்பிலும் பொலிஸாருக்குப் பெரும் சந்தேகம் எழுந்துள்ளது.

திருட்டுக்காகவே இந்தக் கொலை சம்பவம் இடம் பெற்றிருக்கலாம் என்று ஆரம்பத்தில் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டிருந்தனர். எனினும் இந்தக் கொலை நடைபெற்ற இடத்துக்கு அருகில் இருந்த மூதாட்டியின் கைப்பையில், 3 சங்கிலிகள், 2 காப்புகள், மற்றும் 40 ஆயிரத்து 500 ரூபாய் பணம் என்பன காணப்பட்டுள்ளன.

ஆனால் கொலையாளிகள் மூதாட்டியின் கையில் இருந்த மோதிரத்தையும், காதில் இருந்த தோட்டையும் மட்டுமே எடுத்துச் சென்றுள்ளனர். பணத்துக்காகவே இந்தக் கொலை நடைபெற்றுள்ளது என்று வழக்கை திசை திருப்புவதற்காக இவர்கள் தோடு மற்றும் மோதிரத்தை எடுத்துச்சென்றிருக்கலாம் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். கைப்பற்றப்பட்ட பொருட்கள் தடயப்பொருட்களாக நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டுள்ளன. குறித்த சம்பவத்தில் கைது செய்யப்பட்ட ஐவரும் ஆறுகால்மடம் பகுதியைச் சேர்ந்த 22 வயதுக்கு உட்பட்டவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# ஓடும் ரயிலில் சடலம்

கொழும்பு, ஜன.24

பயணித்துக் கொண்டிருந்த ரயிலின் மலசலகூடத்துக்குள் இருந்து, இனந்தெரியாத ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு, கோட்டையில் இருந்து பதுளை நோக்கி பயணித்த இரவு நேரத் தபால் ரயிலிலேயே இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது. உயிரிழந்த நபரின் சடலம் பாதுகாப்பு பிரிவினரால் பண்டாரவளை ரயில் நிலையத்தில் நேற்றுக் காலை ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் கிட்டத்தட்ட 55 வயதுடையவர் எனவும், அவர் இதுவரையிலும் அடையாளம் காணப்படவில்லை எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (அ)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 26 . 06 . 1932



மறைவு 03 . 02 . 2017

### அமரர் சுந்தரம்பிள்ளை கதிரவேலு

(முன்னாள் லொறிச்சாரதி SAFEE & V.M.S. டிரான்ஸ்போட்)

திதி : ஸப்தமி ( 24.01.2018 )

ஓராண்டு ஓடிச் சென்றாலும்
ஓயவில்லை உங்கள் நினைவுகள்
கண் இமைக்கும் பொழுதெல்லாம்
கண்ணெதிரே நிறைந்து
புன்னகையுடன் மிளரும் உங்கள் வதனம்
உங்கள் அன்புக்கு எவையும் ஈடாகுமோ?

துறட்டிப்பனை அம்மன் கோவில் வீதி,
வட்டுக் கிழக்கு, வட்டுக்கோட்டை.

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்

# பாதையின் மேலே பாலம் எப்படிக் கடந்து போவது?



முல்லைத்தீவு, ஜன.24

முல்லைத்தீவு , முள்ளிவாய்க்கால் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பாலங்கள் உரிய முறையில் அமைக்கப்படவில்லை எனப் பொதுமக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

குறித்த பகுதியில் பல இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள சுமார் 7 பாலங்கள் வீதியை விட அதிக உயரத்துக்கு அமைக்கப்பட்டுள்ளதோடு மக்களின் வீடுகளுக்கு நேராகவும் அமைக்கப்பட்டும் உள்ளன. இதனால் குறித்த பாலங்கள் உள்ள வீதிகளூடாக போக்குவரத்து செய்ய பெரும் சிரமப்படுவதாகப் மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த வீதியால், சந்திரன் முன்பள்ளிக்கு சிறுவர்களை அழைத்து செல்பவர்கள் வீதியை பாவிக்க முடியாது மாற்றுப்பாதையைப் பாவிக்கவேண் டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

அத்தோடு வீடுகளுக்கு நேராகப் பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளதால், மழை காலத்தில் தமது வீடுகளுக்குள் வெள்ளநீர் புகும் அபாயம் எழுந்துள்ளதாகவும் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே குறித்த பிரச்சினைக்கு விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு உரிய அதிகாரிடம் அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ)

# 2017 இல் மட்டும் 1,37,000 பேர் தொற்றா நோயால் சாவு

கொழும்பு, ஜன.24

கடந்த வருடம் இருதய நோய் உட்பட தொற்றா நோய்களினால் இலங்கையில் ஒரு லட்சத்து 37 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

தவறான வாழ்க்கைப் பழக்கங்கள், உடற்பயிற்சியின்மை என்பன இவ்வாறான தொற்றா நோய்களுக்குக் காரணமாகும் எனவும் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த உயிராபத்திலிருந்து காப்பதற்கு சமுக சிந்தனை மாற்றமொன்று கட்டியெழுப்பப்பட வேண்டும் என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். (அ)

# பதவிக்கு தகுதி முக்கியம்



கொழும்பு, ஜன.24

“அரசாங்கத்தில் முக்கிய நிர்வாகப் பதவிகளை வழங்கும் போது , அவர்கள் குறித்த பதவிகளுக்குப் பொருத்தமான தகுதிகளைக் கொண்டிருக்கின்றார்களா என ஆராய வேண்டியுள்ளது. ஆகக்குறைந்தது அவர்களுக்கு பொது அறிவு வினாப் பத்திரத்தை வழங்கியாவது அவர்களைப் பரிசோதிக்க வேண்டும்” எனத் தெரிவித்துள்ளார் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது ஊவா மாகாண முதலமைச்சர் தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சைகள் தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

“முதலமைச்சர்கள் மாத்திரமல்ல வேட்பாளர் தெரிவின் போதும் அவர்கள் அதற்குப் பொருத்தமானவர்களா? என்பதனை ஆராய வேண்டும். குறைந்தது பதவிகளை வழங்கும் போது அவர்களுக்குப் பொது அறிவு வினாப் பத்திரமொன்றையாவது வழங்கி அவர்களை சோதித்து பார்க்க வேண்டும். அப்போதுதான் அவர்கள் அந்தப் பதவியைச் சரிவர நிர்வகிப்பார்கள் என்பதை அறியமுடியும். தகுதியற்றோரை பதவியில் இருத்தினால் ஊவா மாகாணத்தின் நிலையே ஏற்படும்” என்றும் அவர் தெரிவித்தார். (அ)

# கடல் அத்துமீறலைத் தடுக்க புதிய சட்டத்திருத்தம் இன்று



கொழும்பு, ஜன.24

விசேடமாக இலங்கை கடல் எல்லைப் பகுதிக்குள் பிரவேசித்து மேற்கொள்ளப்படும் சட்டவிரோத கடல் நடவடிக்கையை தடுக்கும் வகையில், 1979ஆம் ஆண்டு இலக்கம் 59இன் கீழான கடற்தொழில் ( வெளிநாட்டு கடற்தொழில் வள்ளங்கள் முறைப்படுத்தல்) திருத்தச் சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் இன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது.

“ எமது நாட்டுக்கு உட்பட்ட கடற்பகுதியில் கடற்தொழில் மற்றும் நீரியல் வளங்களை பாதுகாப்பதே இதன் நோக்கம் . இதன் கீழ் இதுவரையில் இந்த சட்டத்தில் இருந்த சரத்துகள் பலவற்றில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கைப்பற்றப்படும் கடற்தொழில் வள்ளங்கள் தொடர்பிலான தண்டப்பணம் புதிய திருத்தத்தின் கீழ் அதிகரிக்கப்படுகின்றது. இதுவரையில் நடைமுறையில் இருந்த 15 இலட்சம் ரூபா தண்டப்பணம் 175 மில்லின் ரூபா வரையில் அதிகரிக்கப்படுவதுடன் சம்பந்தப்பட்ட சட்ட நடவடிக்கைகள் கடற்தொழில் வள்ளம் கைப்பற்றப்பட்டு ஒரு மாத காலத்துக்குள் தீர்க்கப்படவுள்ளது.

அதேபோன்று கைப்பற்றப்படும் படகுகள் தொடர்பில் குறிப்பிட்ட அந்த நாட்டின் தூதருக்கு முடிந்தவரை விரைவாக கடற்தொழில் திணைக்களத்தினால் அறிவிக்கப்படல் வேண்டும்.மேலும் சட்ட விதிகளை நடைமுறைப்படுத்தும்போது கைப்பற்றப்படும் கடற்தொழில் வள்ளத்தின் உரிமையாளர் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட வேண்டும்.

புதிய திருத்தத்துக்கு அமைவாக சம்பந்தப்பட்ட தண்டப்பணம் 15 மீற்றருக்கு குறைந்த நீளத்தை கொண்ட வள்ளத்துக்கு 5 மில்லியன் ரூபாவும் , 15 - 24 மீற்றருக்கும் இடைப்பட்ட கடல் தொழில் வள்ளத்துக்கு 20 மில்லியன் ரூபாவும், 24 - 45 இடைப்பட்ட மீற்றர் நீளத்தை கொண்ட கடற்தொழில் வள்ளத்துக்கு 100 மில்லியன் ரூபாவும் , 45-75 மீற்றருக்கு இடைப்பட்ட வள்ளத்துக்கு 150 மில்லியன் ரூபாவும், 75 மீற்றருக்கு மேற்பட்ட மீன்பிடி வள்ளத்துக்கு 175 மில்லியன் ரூபா வரையிலும் தண்டப்பணம் விதிக்கமுடியும்.

இதே போன்று எமது நாட்டு கடல் பகுதிக்கு அனுமதி பத்திரம் இல்லாமல் பிரவேசிக்கும் எத்தகைய கடற்தொழில் வள்ளங்களுக்கும் வள்ளத்துக்கு அதன் நீளத்துக்கு அமைவாக அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 7இலட்சத்து 50 ஆயிரத்திலிருந்து 3 மில்லியன் முதல் 150 மில்லியன் ரூபா வரையில் அதிகரிக்கப்படவுள்ளது” என்று கடற்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார். (அ)


# தமிழ்-சிங்கள மீனவர் முல்லைத்தீவில் மோதல்

முல்லைத்தீவு,ஜன.24

வீட்டுத் திட்டத்துக்கான நில அளவீட்டால் , முல்லைத்தீவில் தமிழ்- சிங்கள மீனவர்களுக்கு இடையே நேற்று எழுந்த முரண்பாட்டால் அந்தப் பகுதியில் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

முல்லைத்தீவு, நாயாற்றுப் பிரதேசத்திலேயே இந்தக் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது. எனினும் இதன்போது, பொலிஸார் தலையிட்டு சிங்கள மீனவர்களுக்கு பாதுகாப்பு வழங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

“அரசியல் தேவைக்காக தென்னிலங்கையிலிருந்து 300 மீனவர்களை அழைத்து வந்து அவர்களை குடியேற்றுவதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கை நியாயமற்றது” என நாயாறு தமிழ் மீனவர்கள் தெரிவித்துள்ளனர். நாயாறு பகுதியில் தென்னிலங்கை மீனவர்களுக்கு நிரந்தர வீடுகளை நிர்மாணித்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வீட்டுத் திட்டங்களுக்கான காணியை அளவிட்டு ஒதுக்குவதற்கு நில அளவையாளர்கள் அங்கு சென்ற சந்தர்ப்பத்திலேயே, அங்கு வாழும் தமிழ் மீனவர்கள் அதற்கு எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர். இதன் காரணமாக தமிழ் மீனவர்களுக்கும் தென்னிலங்கை மீனவர்களுக்கும் இடையில் குழப்பநிலை ஏற்பட்டுள்ளது. அந்தப் பகுதியில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக, நில அளவீட்டு பணி இடை நிறுத்தப்பட்டுள்ளதெனத் தெரிவிக்கப்படுகின்றது. (அ)



# தோப்புக் கரணம் போடப் பண்ணினால் நல்லது

நேற்றையோடை வந்து நூறு நாளுக்கு மேலை பல விசியங்களையும் சொல்லிப் போட்டன். கூட்டிக் கழிச்சுப் பாத்தால் எல்லாம் உண்மையாக் கிடக்கு. அத்தனை குளறுபடியளும், சுத்துமாத்தும், கேவலமுமாக் கிடக்கிது உலகம். என்னத்தைச் சொல்லலாம், என்னத்தை விடலாம் எண்டதை நினைக்கத் தலையிடியாக் கிடக்கு. நாட்டு நடப்பும் அப்பிடித்தான். ஒண்டிலையும் முன்னேற்றத்தையும் காணேல்லை. முந்தின காலத்திலை இருந்த நடைமுறையிலை இருந்து ஒரு வித்தியாசத்தையும் நாங்கள் காணேல்லை. ஆடம்பரந்தான் கூடிப் போச்சுது.

நேற்றைக்குப் பாத்தால் ஒரு புதுக்கதை ஒண்டு பேப்பரிலை கிடந்திது. முந்தின காலத்திலைஎங்கடை பள்ளிக்குடத்திலை ஆரேன் குழப்படி செய்தால் ஒண்டில் பிரம்பாலை அடி, இல்லாட்டிக் கோயிலிலை போடுற மாதிரித் தோப்புக் கரணம், இல்லாட்டி வேதக் கோயிலிலை நிண்டு கும்பிடுகிற மாதிரி முழங்காலிலை நிக்க விடுவினம். நான் நினைக்கிறன் தோப்புக் கரணம் இந்துப் பள்ளிக்குடங்ளிலையும், முழங்காலிலை நிக்கிறது வேதப் பள்ளிக்குடங்களிலையும் இருந்துதான் துவங்கியிருக்க வேணும். இரண்டும் வழிபாட்டு முறை. அதைத்தான் அந்தக் காலத்திலை வாத்திமார் தண்டனையாக் குடுத்திருக்கினம். பாருங்கோவன் எல்லாம் ஒரு நன்மையோடைதான் நடந்திருக்கு. தண்டனையையும் ஒரு ஆன்மிகமாகத்தான் பாத்துக் குடுத்திருக்கினம்.

இப்ப நான் சொல்ல வாறது என்னெண்டால் இப்ப இரண்டு மூண்டு நாளைக்கு முன்னம் பதுளை தமிழ் மகளிர் மகாவித்தியாலயத்திலை படிப்பிக்கிற தமிழ் ரீச்சர் ஒராளை ஊவா மாகாண முதலமைச்சர் முழங்காலிலை நிக்க வைச்சுத் தண்டனை குடுத்திருக்கிறார். அதோடை மன்னிப்பும் கேக்க வைச்சிருக்கிறார். அந்தச் செய்தியை விரிவாப் பாப்பம் எண்டால் பேப்பரிலை பெரிசா- ஒண்டையுங் காணேல்லை. ஆனால் அதுக்கெதிரா ரீச்சர்மார் ஆற்பாட்டம் செய்திருக்கினம். இனி என்ன நடக்குமோ? எண்டு தெரியேல்லை. முந்தியெண்டால் உப்பிடிச் செய்ததுக்குத் தொண்டமான் திருப்பி ஊவாக் காரரை முழங்காலிலை நிக்கப் பண்ணிப் போடுவர். இப்ப அவராலை ஏலாது. அவரே காத்துப் போய்க் கிடக்கிறார். பொதுவா எல்லாத் தலைமையும் காத்துப் போய்த்தான் கிடக்கிது. அதோடை ஓட்டையளும் விழுந்து போச்சுது. எத்தினை தரம் ஊதினாலும் இனிக் காத்தேறாது.

ஊவாக் காரரைப் பாத்து எங்கடை சீ.எம்மும் சில பேரைத் தோப்புக் கரணம் போடப் பண்ணினால் நல்லது. எல்லா இடத்திலையுமில்லை சில இடத்திலை பிள்ளையளுக்குக் குடுக்கிற சத்துணவுச் சாமாங்களையும் சில பேர் விளையாடினம் எண்டும் கதைக்கினம். அதைவிடப் படிப்பிக்காமல் சுத்து மாத்துப் பண்ணிறவையையும் அடையாளங் கண்டு தோப்புக் கரணம் போடப் பண்ணினால் நல்லது. அல்தவிட வட மாகாண ஒபிஸ் வழியவும் போய்ப் பாத்தால் சிலதுகள் அங்கையும் இஞ்சையும் நடந்து திரிஞ்சு தங்கடை வேலையைப் பாக்காமல் மற்றவையின்ரை வேலைக்குள்ளை தலையிட்டுத் தெண்டா எடுத்துக் கொண்டு திரியிறவை, அவையையும் சீ.எம் தோப்புக்கரணம் போடப் பண்ணினால் இன்னும் நல்லது எண்டது என்ரை ஆலோசனை. அது உடல் வள நல ஆரோக்கியத்துக்கும் நல்லதெல்லே!

சில பள்ளிக்குடத்திலை வாத்தியாரைப் பிள்ளையள் பூப்போட்டுக் கும்பிடுதுகள். சில பள்ளிக் குடத்திலை “உவன் துலைஞ்சு போகானோ” எண்டு திட்டிக் கொண்டும் பிள்ளையள் பள்ளிக்குடத்துக்கு வருகிதுகள். அண்டைக்குக் கல்வித் திணைக்களத்திலை வேலை செய்யிற ஒரு ஆள் சொல்லுறார் இன்னும் எங்களுக்கு உரிய கல்விமுறை நடைமுறைக்கு வரேல்லை எண்டு. எங்களுக்கு அளிவில்லாத சட்டையைப் போடப் பண்ணிப் பிள்ளையளை இடஞ்சல் படுத்தினம் எண்டு

இப்பவும் சீ.எம் சில பேரை அறையைப் பூட்டிப்போட்டு மற்றவையளுக்குத் தெரியாமல் நிண்டு தோப்புக்கரணம் போடப் பண்ணியிருக்கிறதாக் கேள்வி. அவர் ஒரு நீதிபதி எண்டபடியால் மற்றவைக்கு என்ன தண்டனை, எப்பிடிக் குடுக்க வேணும் எண்டதும் தெரியும். நான் சொல்லத் தேவையில்லை. அவர் செய்வார்?

**வில்லங்கம் விநாசி**

# இலங்கை - சிங்கப்பூர் ஒப்பந்தம் கைச்சாத்து

கொழும்பு, ஜன.24

இலங்கைக்கும் சிங்கப்பூருக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை நேற்றுக் கைச்சாத்திடப்பட்டுள்ளது. சிங்கப்பூர் பிரதமர் லீ ஷியன் லூங் மற்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும் இடையிலான இருதரப்பு பேச்சு வார்த்தையின் பின்னர் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இந்த ஒப்பந்தத்தில் அபிவிருத்தி மூலோபாய மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரம சிங்கப்பூர் கைத்தொழில் வர்த்தக அமைச்சர் எஸ். ஈஸ்வரன் ஆகியோர் கைச்சாத்திட்டுள்ளனர். (அ)

## தொடர்ச்சிகள்

### போராட்டம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமது போராட்டத்திற்கு இலங்கை அரசானது தீர்வினைப் பெற்றுத்தராது என்றும், தமது போராட்டத்தினை தொடர்ந்து முன்னெடுக்கவுள்ளதாகவும் சர்வதேசத்திடம் தமது உறவுகளை மீட்டுத்தருமாறு கோரியுள்ளதாகவும் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

வவுனியா கந்தசாமி ஆலயத்துக்கு நேற்றுக் காலை 11.30மணியளவில் சென்று வழிபாடுகளை மேற்கொண்ட பின்னர் போராட்ட களத்துக்குச் சென்ற உறவுகள் அங்கிருந்து தமது கவனயீர்ப்பினை மேற்கொண்டனர். பெருமளவான உறவுகள் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டனர். (அ)

### ஊவா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்குவதன் பொருட்டு, முதலமைச்சர் சட்டத்தரணியின் ஊடாக பதுளை பொலிஸ் நிலையத்தில் நேற்றுக்காலை முன்னிலையானார்.

இதன்போது ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சம்பத் தஸாநாயக்க பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டார். (அ)

### பிணைமுறி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையும் நேற்று நாடாளுமன்றத்தில் சபை முதல்வர் லக்ஷ்மன் கிரியெல்லவால் சமர்ப்பிக்கப்பட்டன.

சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் நாடாளுமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1 மணிக்கு ஆரம்பமானது. சபாநாயகர் தன்னுடைய அறிவிப்பின்போதே இந்த இரண்டு அறிக்கைகளும் சபை முதல்வரால் சமர்ப்பிக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

பிணைமுறி அறிக்கை தொடர்பில் இம்மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் விவாதம் ஒன்று நடத்தப்பட வேண்டும் என்று முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக கடந்த 10ஆம் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்பின் பேரில் நாடாளுமன்றம் கூட்டப்பட்டது. என்றாலும், குறித்த தினத்தில் பிணைமுறி அறிக்கை நாடாளுமன்றுக்குக் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

இந்த நிலையிலேயே, நாடாளுமன்றம் நேற்றுக் கூடியபோது பிணைமுறி விவகாரம் தொடர்பிலான அறிக்கையும், பாரிய நிதி மோசடிகள் தொடர்பிலான ஆணைக் குழுவின் இறுதி அறிக்கையும் கடந்த 17 ஆம் திகதியே கிடைக்கப்பெற்றதாக சபாநாயகர் தெரிவித்தார்.

இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ள கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இந்த இரண்டு அறிக்கைகளையும் எப்போது விவாதம் செய்வதென தீர்மானிக்கப்படவுள்ளது. (அ)

### பேரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்ற உறுப்பினருக்கு மட்டும் வழங்கப்படாததன் பின்னணியில் த.தே.கூட்டமைப்பு மத்திய அரசின் வரவு செலவு திட்டத்திற்கு கையை தூக்கியதற்காக பேசப்பட்ட பேரம் அம்பலமாகியுள்ளது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

2 கோடி ரூபா நிதியை அபிவிருத்திக்காகப் பெற்றார்கள் என்றால் அதில் தவறிருக்காது. ஆனால் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா கூறுகிறார், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஒதுக்கீட்டுக்கு மேலதிகமாக கொடுக்கப்பட்ட நிதியாகவே இந்த 2 கோடி ரூபா நிதி கொடுக்கப்பட்டதாம். அப்படியானால் நாங்கள் கேட்கிறோம் மேலதிகமாக அபிவிருத்திக்கு கொடுக்கப்பட்ட 2 கோடி ரூபா நிதி எதற்காக சகல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் கொடுக்கப்படவில்லை? அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் கொடுக்காவிட்டாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 16 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஏன் கொடுக்கப்படவில்லை? இதன் உண்மையான அர்த்தம் மத்திய அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்துக்கு கை உயர்த்தியவர்களுக்கே அந்த நிதி வழங்கப்பட்டது.

அப்படியானால் 2 கோடி ரூபா நிதி லஞ்சமாகவே பெறப்பட்டிருக்கின்றது. தற்போது மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் 'சுரேஷ்பிரேமச்சந்திரன் 4 கோடி பெற்றதாக' கூறியுள்ளார். ஆம். 4 கோடியை நான் என் கைகளில் வாங்கவில்லை.

திட்டத்தை மக்கள் எனக்குக் கொடுத்தார்கள். அதனை நான் அரசுக்குக் கொண்டு சென்றேன். அவர்கள் அதனைச் செய்தார்கள். எனவே கஜதீபனுக்கு கதை தெரியாவிட்டால் தெரிந்து கதைக்க வேண்டும்.

மேலும் 2 கோடி ரூபா பெற்றுக் கொண்டதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒப்புக்கொண்டிருக்கும் நிலையில் சிலர் மட்டும் தாங்கள் பெறவில்லை எனவும், உறுதிப்படுத்த முடியுமா? எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனை நோக்கி கேள்வி எழுப்புவதன் பின்னணி என்ன? என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளிப்படுத்த வேண்டும்" என அவர் கேட்டுக்கொண்டார்.(அ)

### தமிழீழம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிடைக்கவில்லை என்ற உண்மையை ஏற்றுக்கொள்ள வேண்டும். எங்களுக்கு செய்யவில்லை என்றால் எங்களுக்கு தனி நாடு வழங்குங்கள் என தமிழ் மக்கள் தமிழீழம் கோருவது நியாயமான ஒன்றாகும் . இலங்கை சிறிய நாடு. இங்கு ஏனைய நாடுகளைப் போல அதிக சனத்தொகையான மக்கள் இல்லை. பல தசாப்தங்களாக பிரிந்து வாழும் மக்கள் பகுதியினர் ஒருவருக்கு ஒருவர் அறிமுகப்படுத்திக் கொள்ளாமையாலேயே போர் நிலை ஏற்பட்டது.

நான்கு மதங்களைச் சேர்ந்த மக்கள் நாட்டில் வாழ்ந்த போதிலும், ஒருவருக்கு ஒருவர் ஒருபோதும் பேசிக் கொள்வதில்லை. நாட்டில் பெரும் மோதல் ஏற்படுவதற்கு புரிந்துணர்வின்மையே காரணம். ஒருவருடைய மொழியை ஒவ்வொருவராலும் பேச முடியாமையே நாட்டில் கொடூர யுத்தம் ஏற்படுவதற்கான பிரதான காரணம். சமூகங்கள் சகஜமாக இருந்திருந்தால் பிரபாகரன் என்ற ஒருவரை உருவாக்காமல் இருந்திருக்கலாம். தமிழ், முஸ்லிம் பகுதிகளில் அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும் மந்தமான நிலையிலேயே அவை காணப்படுகின்றன" எனவும் அவர் தெரிவித்தார். (அ)

### ஊரெழுவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞரொருவர் தூக்கி வீசப்பட்டுச் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இந்த விபத்தில் மேலுமொரு இளைஞர் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

யாழ்.குப்பிளானிலிருந்து யாழ்ப்பாணம் நகரத்தை நோக்கி மோட்டார் சைக்கிளில் இரு இளைஞர்கள் சென்று கொண்டிருந்தனர். அப்போது முன்னால் சென்ற மினி பஸ் ஒன்றை அந்த இளைஞர்கள் முறையற்ற விதத்தில் முந்திச் செல்ல முற்பட்டனர்.

ஆயினும் இதன்போது எதிர்பாராத விதமாக முன்னால் வந்த ஹன்ரருடன் மோதுண்டு, மோட்டார் சைக்கிள் தூக்கி வீசப்பட்டது.

இதனால் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற இளைஞன் சம்பவ இடத்திலேயே உடல் சிதறிப் பலியானார். அவருடன் பின்னாலிருந்து பயணித்த இளைஞன் படுகாயமடைந்த நிலையில் பொதுமக்களால் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் ஆபத்தான நிலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இளைஞர்கள் பயணித்த மோட்டார்ச் சைக்கிளும் விபத்தில் சின்னாபின்னமானது.

இந்தக் கொடூர விபத்தில் உயிரிழந்த , மற்றும் காயமடைந்த இளைஞர்கள் யாழ். குப்பிளான் தெற்குப் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனக் கூறப்படுகின்றது. அதிக வேகமும், முறையற்ற விதத்தில் முந்திச் செல்ல முற்பட்டமையுமே விபத்துக்குக் காரணம் என நேரில் இந்தச் சம்பவத்தைக் கண்டவர்கள் தெரிவித்தனர். (அ)

### ஐ.தே.க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றும்போதே இவ்வாறு கூறினார்.அவர் மேலும் கூறுகையில்,

இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி நாட்டில் உள்ள சபைகளில் 70 வீதத்தைக் கைப்பற்றும்.இந்த நாட்டில் ஆட்சியைக் கைப்பற்றுவது இரண்டே இரண்டு கட்சிகள்தான். ஒன்று ஐக்கிய தேசிய கட்சி இல்லாவிட்டால் சுதந்திரக் கட்சி. சுதந்திரக் கட்சி இப்போது மைத்திரி அணி என்றும் மகிந்த அணி என்றும் இரண்டாக உடைந்துவிட்டது. இவர்கள் சண்டை பிடித்து இவர்களின் வாக்கு வங்கியை இரண்டாக உடைப்பதால் இந்த இரண்டு அணிகளில் ஒன்றும் ஆட்சிக்கு வராது.

குறிப்பாக, கிழக்கு மாகாணத்தில் எங்கேயுமே மைத்திரியின் கைக்கோ அல்லது மகிந்தவின் மொட்டுக்கோ வாக்குப் போடமாட்டோம்.இவர்கள் சிங்களப் பகுதிகளில் வெற்றி பெறமாட்டார்கள் என்று எமக்குத் தெரியும். அதனால் வெற்றிபெற முடியாத ஒரு தரப்புக்கு நாம் வாக்குப் போடத் தயாரில்லை.

சிங்கள மக்கள்தான் இந்த நாட்டில் ஆட்சியைத் தீர்மானிப்பவர்கள். அவர்கள் இன்று ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியைக் கொண்டு வரவேண்டும் என்று தீர்மானித்துவிட்டனர். உள்ளூராட்சி சபைகளை ஐக்கிய தேசிய கட்சி கைப்பற்றினால் மாகாண சபைத் தேர்தலை உடன் நடத்துமாறு ரணில் உத்தரவிடுவார். அந்த மாகாண சபைத் தேர்லில் ஒன்பது சபைகளில் எட்டு சபைகளை ஐக்கிய தேசிய கட்சி கைப்பற்றும்.

.உள்ளூராட்சித் தேர்தலிலும், மாகாண சபைத் தேர்தலிலும் ஐக்கிய தேசிய கட்சி வெற்றிபெற்றால் முன்கூட்டியே நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. 19ஆவது திருத்தச் சட்டத்தின்படி நான்கு வருடங்கள் முடிந்ததும் நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியும். அந்தத் தேர்தலிலும் ஐக்கிய தேசிய கட்சியே வெற்றிபெறும். ஜனாதிபதித் தேர்தலிலும் ஐக்கிய தேசிய கட்சிதான் வெல்லும்.

இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி வெற்றி பெற்றால் வடக்கு-கிழக்கு உள்ளிட்ட அனைத்து மாகாணங்களிலும் ஆளுநர்கள் மாற்றப்படுவார்கள். கிழக்கு மாகாண சபையின் ஆயுட்காலம்முடிந்து நான்கு மாதங்கள் ஆகின்றன. இந்த நான்கு மாதங்களுக்குள் ஆளுநரால் ஓர் அபிவிருத்திப் பணிகூட முன்னெடுக்கப்படவில்லை.

நாம் ஆட்சியில் இருந்தபோது ஒவ்வொரு நாளும் ஏதாவது அபிவிருத்தி வேலையைச் செய்துகொண்டுதான் இருந்தோம். நாம் போனதும் எல்லாம் அப்படியே நின்றுவிட்டன. ஆளுநரால் எதுவும் செய்யமுடியாது என்பதற்கு இது ஒன்றே போதும்" -என்று அவர் தெரிவித்தார்.(அ)

### இலங்கையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை தன்னிச்சையாக மேற்கொண்டு வரும் மத்திய அரசின் சதிக்கு இந்திய அரசும் துணைபோவது வேதனையளிக்கின்றது. என வட மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

அமைச்சரின் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

" யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 26, 27 மற்றும் 28 ஆகிய நாட்களில் நடைபெற ஏற்பாடாகியுள்ள 9வது சர்வதேச வர்த்தக கண்காட்சி நிகழ்வும் வடக்கு மாகாண சபையை முற்றிலுமாக புறக்கணித்து நடாத்தப்படவிருக்கின்றது.

இந்நிகழ்விற்கான முன்னேற்பாடுகள் ஏறக்குறைய நிறைவடையும் இத்தருணம் வரை வட மாகாண சபையின் வர்த்தகமும் வாணிபமும் அமைச்சராக இருக்கும் எனக்கு எதுவித அறிவிப்போ, அழைப்போ கிடைக்கவில்லை.

மக்களால் ஜனநாய முறையில் தேர்வு செய்யப்பட்ட மாகாண சபை நிர்வாகத்தினை வேண்டுமென்றே புறக்கணித்து மத்திய அரசின் நிர்வாக கட்டமைப்புகளினூடாக வடக்கில் பொது நிகழ்வுகளையும் அபிவிருத்தி நடவடிக்கைகளையும் இலங்கை அரசு மேற்கொண்டு வருகின்றது. இது ஒரு திட்டமிட்ட சதியாகும். இதற்கு இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகளும் துணை போவது வேதனையளிக்கின்றது.

வடக்கில் மாகாணத் சபை தேர்தலை நடத்துவதற்கு அழுத்தங்களை பிரயோகித்த இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் அதற்கான அதிகாரங்களை வழங்கும் விடயத்தில் மௌனமாக இருக்கின்றன. இது வட மாகாண சபையை திட்டமிட்டு புறக்கணித்து முன்னெடுப்புகளை மேற்கொள்வதற்கான உந்துதலை இலங்கை அரசாங்கத்திற்கு கொடுத்துள்ளது.

இவ்விடயத்தில் இந்தியாவும் மௌனமாக இருப்பது தமிழர்களாகிய எமக்கு பெரும் ஏமாற்றத்தினையும் வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது. இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் வடக்கு-கிழக்கு இணைந்த தமிழர் தாயகம் ஏற்று அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

இந்தியாவின் சிறந்த நட்பு நாடாக இலங்கையைச் சீராட்டி பாராட்டி வந்த நிலையிலும் இந்திய-இலங்கை ஒப்பந்தத்திற்கு வேட்டுவைக்கும் வகையில் வடக்கு-கிழக்கு மாகாணங்கள் தனித்தனி நிர்வாக அலகுகளாக பிரிக்கப்பட்டது.

தமிழர்களுக்கு எதிரான இலங்கை அரசின் இந்த நடவடிக்கையினை கண்டிக்கவோ தடுத்து நிறுத்தவோ அப்போதைய இந்திய அரசோ தொடர்ந்து வந்த அரசுகளோ, ஆக்கபூர்வமான முயற்சிகளை எடுத்திருக்கவில்லை . இது பெரும் குறையாகவே இன்றுவரை நீடித்து வருகின்றது.

தமிழ் மக்களின் விடுதலைக்கான போராட்டத்தினை மக்களின் ஆதரவுடன் விடுதலைப் புலிகள் முன்னெடுத்து வந்த போது, மக்களிடம் இருந்து புலிகளை அந்நியப்படுத்தி பலவீனப்படுத்துவதற்கு மேற்கொண்ட சதித்திட்டத்தின் நீட்சியாகவே தற்போதைய மாகாண சபையை புறக்கணிக்கும் அரசின் செயற்பாடுகளும் அமைந்துள்ளன.

மக்களால் ஜனநாயக வழியில் தெரிவு செய்யப்பட்ட வட மாகாண சபையின் நிர்வாக எல்லைக்குள்ளாக நடைபெறும் முன்னெடுப்புகளில் வட மாகாண சபையை புறந்தள்ளும் இலங்கை அரசின் இச்சதியில் இந்திய அரசும் மௌனமாக பங்கேற்பதானது, அதிகாரப் பரவலாக்கத்தினை மேற்கொண்டு தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டுமென்று வலியுறுத்தி வருவதன் மீதான ஐயப்பாட்டினை தமிழர்களிடையே ஏற்படுத்தியுள்ளது.

சர்வதேச வர்த்தக கண்காட்சிக்கு இந்திய அரசின் ஒத்துழைப்பும் ஆதரவும் மேலோங்கியிருக்கும் நிலையில் குறித்த நிகழ்விற்கு வடக்கு மாகாண சபை முதலமைச்சர் மற்றும் துறைசார் அமைச்சர் உள்ளிட்டவர்களின் பங்கேற்புடனேயே அது நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்திக் கூறக்கூடிய இடத்தில் இருந்தும் அதனை செய்யாதது உண்மையில் எமது மக்களுக்கு பெரும் வேதனையையும் ஏமாற்றத்தினையும் ஏற்படுத்தியுள்ளது" எனவும் அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்தார். (அ)

## இதுதாண்டா குரல்!



சென்னை,ஜன.24

'தானா சேர்ந்த கூட்டம்' படத்தில் சி.பி.ஐ அதிகாரியாக முக்கிய பாத்திரத்தை ஏற்று நடித்த நடிகர் சுரேஷ் மேனன், படத்தில் தனக்குப் பயன்படுத்தப்பட்ட டப்பிங் குரல் குறித்து அதிருப்தி தெரிவித்திருக்கிறார்.

இது தொடர்பாக அவர் தனது ஃபேஸ்புக்கில் ஒரு வீடியோவை வெளியிட்டிருக்கிறார். அதில் ஹிந்தியில் பேசுகிறார். 44 விநாடிகளே அந்த வீடியோ நீள்கிறது. ஆனால், அதில் அவரது குரல் கம்பீரமாக ஒலிக்கிறது.

அந்த வீடியோவின் கீழ், "தானா சேர்ந்த கூட்டத்தில் எனது குரல் ஏன் இடம்பெறவில்லை எனக் கேட்கும் அனைவருக்கும் ஒன்று சொல்லிக் கொள்கிறேன். நான் மொத்தப் படத்துக்கும் டப்பிங் பேசியிருந்தேன். ஆனால், படத்தில் வேறு ஒரு குரலை பயன்படுத்தியுள்ளனர். என்னுடைய குரல் மாதிரியை .இந்த வீடியோ மூலம் கேளுங்கள். எனது சொந்தக் குரலே எனது கதாபாத்திரத்துக்குச் சிறப்பாகப் பொருந்தியிருக்கும் என நான் நினைக்கிறேன். படத்தைப் பார்த்தவர்கள் உங்கள் கருத்துகளைத் தெரிவியுங்கள்" என்றொரு தகவலையும் பகிர்ந்திருக்கிறார்.

அதன் கீழ், பலரும் தங்கள் கருத்துகளை வெளிப்படுத்தியிருக்கின்றனர். அவர்களில் பெரும்பாலானோர் சுரேஷ் மேனனின் கருத்தை ஆமோதித்துள்ளனர். சிலர், இந்தக் குரலைப் பயன்படுத்தாதது படத்துக்கே இழப்பு எனத் தெரிவித்துள்ளனர்.(அ)

## பணியாளர் இல்லாத சிறப்பங்காடி




நியூயோர்க், ஜன.24

பணியாளர்கள்இல்லாமலேயே வாடிக்கையாளர்கள் தமக்கு விரும்பிய பொருட்களை வாங்கும் புதிய சிறப்பங்காடி ஒன்றை அமேசான் நிறுவனம் உருவாக்கியுள்ளது.

'அமேசான் கோ' என்ற இந்த சிறப்பங்காடியில் சோதனை விற்பனை கடந்த ஒரு வருடமாக நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு பகுதியிலும் மேலே வைக்கப்பட்டிருக்கும் கமரா வாடிக்கையாளரை அடையாளம் கண்டுகொண்டு அவர்கள் வாங்கும் பொருட்கள் என்ன, திரும்ப வைக்கும் பொருட்கள் என்ன என்பதைப் பதிவு செய்துகொள்ளும்.

வாங்கிய பொருட்களுடன்வாடிக்கையாளர்கள் கடையை விட்டுப் போகும்போது அவர்களின் கடனட்டையில் இருந்து அதற்குரிய பெறுமதி கழித்துக் கொள்ளப்படும். இதனால் பில் போடுவதற்கோ, காசு கொடுப்பதற்கோ நீண்டவரிசையில் நிற்கவேண்டிய அவசியம் இருக்காது.

ஆயினும், ஒரே மாதிரி உருவ அமைப்புடையவர்களை அடையாளம் காணுவதிலும், பொருட்களை வெவ்வேறு இடங்களில் குழந்தைகள் மாற்றி வைப்பதாலும் சில சிக்கல்கள் இந்தச் சிறப்பங்காடியில் இருப்பதாகத் தெரிகிறது.

அதிக நேரம் வரிசையில் நிற்பதைத் தவிர்ப்பதாலும், அதிவேகமாகப் பொருட்கள் வாங்கும் அனுபவத்தைத் தருவதாலும் 'அமேசான் கோ' நல்ல வரவேற்பைப் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (அ)



# வெடிகுண்டு லொறி பெல்ஜியத்தில் மாயம்

பெல்ஜியம், ஜன.24

பெல்ஜியத்தில் வெடிகுண்டு தயாரிக்கப் பயன்படுத்தப்படும் 33,500 லீற்றர் இரசாயனம் நிரம்பிய லொறி மாயமாகியுள்ளது. இதனையடுத்து ஐரோப்பா முழுவதும் தீவிர தேடுதலுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த விவகாரம் தொடர்பாக இன்டர்போல் ஐரோப்பா முழுவதும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

பெல்ஜியத்தின் நிறுத்தப்பட்டிருந்த குறித்த லொறி எவ்வாறு மாயமானது என்பது தொடர்பில் இதுவரை உறுதிப்படுத்தப்பட்ட தகவல் எதுவும் வெளியாகவில்லை. ஸ்பெயின், பிரான்ஸ் மற்றும் பெல்ஜியம் அதிகாரிகள் இந்த விவகாரத்தில் தீவிர நடவடிக்கை எடுத்து வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

திருடப்பட்ட லொறியின் பதிவு எண் மாற்றப்பட்டு திருடர்கள் பெல்ஜியத்தில் இருந்து வெளியேறியிருக்கலாம் அல்லது பாதுகாப்பான இடம் நோக்கி விரைந்திருக்கலாம் என பொலிஸ் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். பல்வேறு நாடுகளில் உள்ள துறைமுக அதிகாரிகளுக்கும் இந்த விவகாரம் தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ)

## முடக்கம் நீங்கியது

வோஷிங்டன், ஜன.24

அமெரிக்காவில் வரவு செலவுத் திட்டத்துக்கு தற்காலிகமாக, நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்ததைத் தொடர்ந்து அங்கு கடந்த மூன்று நாட்களாக நிலவி வந்த முடக்கம் (ஷட் டவுண்) சீரடையத் தொடங்கியுள்ளது.

அமெரிக்க நாடாளுமன்றத்தில் நடப்பு 2018 நிதியாண்டுக்கான பட்ஜெட் எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு காரணமாக இதுவரை நிறைவேறவில்லை. அமெரிக்காவில் 7 லட்சத்துக்கும் மேற்பட்ட வெளிநாட்டினரை நாட்டை விட்டு வெளியே அனுப்பக் கூடாது என, ஜனநாயகக் கட்சியினர் கோரி வருகின்றனர். ஆனால், அதற்கு ஆளும் கட்சியான குடியரசுக் கட்சி உறுப்பினர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. இதற்கு பதிலடியாக செனட் சபையில் ஜனநாயகக் கட்சியினர் பட்ஜெட்டை நிறைவேற்ற ஆதரவு தர மறுத்தனர்.

இதனால் கடந்த 20 ஆம் திகதி முதல் அமெரிக்க அரசு நிர்வாகம் முடங்கியது. பெரும்பாலான துறைகள் மூடப்பட்டன. எனினும் அத்தியாவசிய தேவைகளான இராணுவம், பொலிஸ், அஞ்சல் சேவை, விமானப் போக்குவரத்து கட்டுப்பாடு, மருத்துவ சேவை, சிறைகள், வரி விதிப்பு, மின் உற்பத்தி ஆகிய துறைகள் மட்டுமே இயங்கின. அமெரிக்க மத்திய அரசின் பணியாளர்களுக்கு ஊதியம் அளிக்க முடியாத சூழல் ஏற்பட்டது.

இதையடுத்து சிக்கலுக்கு தீர்வு காண பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. அதில் உடன்பாடு ஏற்பட்டது. இடைக்கால ஏற்பாடாக, தற்காலிகமாக பட்ஜெட்டுக்கு அனுமதி வழங்க அமெரிக்க நாடாளுமன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளது. இதனால் கடந்த சில நாட்களாக நிலவிய முடக்க நிலை நீங்கி, அரச நிர்வாகம் இயல்பு நிலைக்குத் திரும்பத் தொடங்கியுள்ளது. (அ)

## அலஸ்காவில் அதிர்வு: சுனாமி எச்சரிக்கை

அலஸ்கா, ஜன.24

அமெரிக்காவின் அலஸ்கா மாகாணத்தின் கடலோர பகுதியில் 8.2 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதால், சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மாகாணத்தின் 'கொடியக்' நகரின் தென்கிழக்குப் பகுதியில் 300 கிலோ மீற்றர் பகுதியில் குறித்த நிலநடுக்கம் தாக்கியுள்ளது. இதுகுறித்த தகவலை அமெரிக்காவின் புவியியல் ஆய்வு மையம் வெளியிட்டுள்ளது. இந்த நிலநடுக்கம் காரணமாக சுனாமி எச்சரிக்கை விடுக்கப்படுவதாக தேசிய சுனாமி எச்சரிக்கை மையம் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த எச்சரிக்கையானது அலஸ்கா மற்றும் பிரிட்டிஷ் கொலம்பியாவின் கடலோரப் பகுதிகளுக்கு விடுக்கப்பட்டுள்ளது. (அ)

## ஜப்பானில் போர் ஒத்திகை



டோக்கியோ, ஜன,24

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நேற்று முன்தினம் நடந்த இராணுவத் தாக்குதல் ஒத்திகையில் பொதுமக்களும் பங்கேற்றுள்ளனர்.

வட கொரியாவின் அணு ஆயுதத் தாக்குதல் எச்சரிக்கை காரணமாக அந்தப் பிராந்தியத்தில் உள்ள நாடுகள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அவ்வப்போது எடுத்து வருகின்றன. இந்த நிலையில் நேற்று முன்தினம் காலை ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் இராணுவத் தாக்குதல் ஒத்திகை நடத்தப்பட்டது.

டோக்கியோவிலுள்ள' பொழுதுபோக்கு பூங்கா ஒன்றில் நேற்று முன்தினம் திடீரென ஒரு அறிவிப்பு வெளியிடப்பட்டது.

"ஏவுகணை செலுத்தப்பட்டிருப்பதாக எங்களுக்குத் தகவல் கிடைத்துள்ளது. எனவே பொதுமக்கள் தங்களது வீடுகளை விட்டு வெளியேறி அருகிலுள்ள பாதுகாப்பான கட்டடங்களுக்குள்ளோ அல்லது சுரங்கப் பகுதிகளுக்கோ செல்லுங்கள்" என்று கூறப்பட்டது.

இதையடுத்து பூங்காவிலிருந்து 250-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் அந்தப்பகுதியை விட்டு அருகிலிருந்த கட்டடங்களுக்குள்ளும், சுரங்கப் பாதைக்குள்ளும் தஞ்சமடைந்தனர்.

சில நிமிடங்களுக்குப் பின்னரே அதுவொரு இராணுவத் தாக்குதல் ஒத்திகை என்று அதிகாரிகள் அறிவித்தனர்.

2 ஆம் உலகப் போருக்குப் பிறகு இது போன்ற ஒத்திகை நடந்ததால் அப்பகுதி மக்கள் சிலர் மிகவும் பீதியில் ஆழ்ந்தனர். ஜப்பான் நிலநடுக்க பூமி என்பதால் அடிக்கடி அங்கு இதுபோன்ற ஒத்திகைகள் நடப்பது சாதாரணம்தான். ஆனால் ஏவுகணை, இராணுவத் தாக்குதல் ஒத்திகைகள் இப்பகுதி மக்களுக்கு புதிதானவை.

வட கொரியாவின் அணு ஆயுதப் போராட்டத்தின் காரணமாகவே இது போன்ற ஒத்திகை நடத்தப்பட்டதாக ஜப்பான் தெரிவித்துள்ளது. (அ)



# பரிதாப வெளியேற்றம்

மெல்பேர்ண், ஜன. 24

அவுஸ்ரேலிய ஓபன் டென்னிஸ் தொடரின் காலிறுதியாட்டத்தில் நடால் காயம் காரணமாக இடைநடுவில் வெளியேறினார். சிலிச் மற்றும் எட்மண்ட் ஆகியோர் அரையிறுதிக்கு முன்னேறினார்கள்.

அவுஸ்ரேலியா ஓபன் டென்னிஸ் தொடர் மெல்பேர்ண் நகரில் நடைபெற்று வருகிறது. இதில், நேற்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இரண்டு காலிறுதியாட்டங்கள் நடைபெற்றன. ஒன்றில் 3ஆம் நிலை வீரரான டிமிட்ரோவ், தரநிலை பெறாத இங்கிலாந்தின் கைல் எட்மண்டை எதிர்கொண்டார்.

டிமிட்ரோவ் முதல் சுற்றை 4-6, 6-3, 3-6, 4-6 என்ற கணக்கில் இழந்து போட்டியிலிருந்து வெளியேறினார். 1997ஆம் ஆண்டுக்குப் பிறகு முர்ரேயைத் தவிர்த்து அரையிறுதிக்கு முன்னேறும் முதல் இங்கிலாந்து வீரர் எட்மண்ட் ஆவார்.

மற்றொரு ஆட்டத்தில் முதல் நிலை வீரரான ஸ்பெய்னின் ரபெல் நடால், 6ஆம் நிலை வீரரான மரின் சிலிச்சை எதிர்கொண்டார். இருவரும் முன்னணி வீரர்கள் என்பதால் போட்டி கடுமையாக இருந்தது. முதல் சுற்றை நடால் 6-3 எனக் கைப்பற்றினார். ஆனால் 2ஆவது சுற்றை 3-6 என இழந்தார். 3ஆவது சுற்றை 7-6 என நடால் கைப்பற்றினார். ஆனால் சிலிச் 4ஆவது சுற்றை 6-2 என்ற கணக்கில் கைப்பற்றினார்.

இதனால் வெற்றியைத் தீர்மானிக்கும் கடைசிச் சுற்றில் இருவரும் களமிறங்கினார்கள். இதில் சிலிச் 2-0 என முன்னிலையில் இருந்தபோது நடால் காயத்தால் போட்டியிலிருந்து விலகினார். இதனால் சிலிச் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார். (ஐ)



# டயமன்ஸை வீழ்த்தியது கொற்றாவத்தை றேஞ்சர்ஸ்

வடமராட்சி, ஜன. 24

அம்பாள் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டிக்கு றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகம் தகுதிபெற்றது.

நாச்சிமார் கோவிலடி ஸ்ரீ அம்பாள் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்டம் ஒன்று நேற்று நடைபெற்றது.

இதில், கொற்றாவத்தை றேஞ்சஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது.

முதல் பாதியாட்டம் எவ்விதக் கோல்களுமின்றி முடிவடைந்தது. இரண்டாம் பாதியாட்டத்தின் ஆரம்பத்தில் முதல் கோலை டயமன்ஸ் அணி போட்டது. ஆனாலும் சளைக்காத றேஞ்சர்ஸ் வீரர்கள் பதில்கோல் போட, ஆட்டம் 1:1 என்ற கோல் கணக்கில் சமநிலையானது.

பின்னர் கடைசிக் கட்டத்தில் ஆட்டம் முடிவடைய 2 நிமிடங்கள் இருக்கையில் மீண்டும் றேஞ்சர்ஸ் அணி கோல் ஒன்றைப் போட்டு 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது. (ஐ)




# கோடிகளில் புரளும் அணி

மான்செஸ்டர், ஜன. 24

டெலாய்ட் நிறுவனம் வருமான அடிப்படையில் உலகின் தலைசிறந்த பணக்கார உதைபந்தாட்டக் கழகங்களைத் தெரிவு செய்துள்ளது. இதில் பிரிமீயர் லீக் தொடரில் விளையாடும் இங்கிலாந்தின் மான்செஸ்டர் யுனைடெட் அணி 2ஆவது முறையாக முதல் இடத்தைப் பிடித்துள்ளது.

ஸ்பெய்னின் ரியல் மாட்ரிட் 2ஆவது இடத்தையும், பார்சிலோனா 3ஆவது இடத்தையும் பிடித்துள்ளன.

2016-17 பருவகாலத்தில் ஒவ்வொரு கழகங்களும் ஈட்டிய வருமான அடிப்படையில் கழகங்கள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. பணப்பெறுமதி யூரோவில் கொடுக்கப்பட்டுள்ளது.

1. மான்செஸ்டர் யுனைடெட் (676.3 மில்லியன்)
2. ரியல் மாட்ரிட் (674.6 மில்லியன்)
3. பார்சிலோனா (648.3 மில்லியன்)
4. பெயர்ன் முனிச் (587.8 மில்லியன்)
5. மான்செஸ்டர் சிட்டி (527.7 மில்லியன்)
6. ஆர்சனல் (487.6 மில்லியன்)
7. பரிஸ் செயின்ட் ஜெர்மைன் (486.2 மில்லியன்)
8. செல்சியா (428 மில்லியன்)
9. லிவர்பூல் (424.2 மில்லியன்)
10. யுவான்டஸ் (405.7 மில்லியன்) (ஐ)

# சச்சினுக்கு 2 விருதுகள்

தெஹ்ரான், ஜன. 24

ஈரான் தலைநகர் தெஹ்ரானில், விளையாட்டை மையமாகக் கொண்ட சர்வதேச திரைப்படவிழா நடைபெற்றது.

இதில் விளையாட்டை அடிப்படையாகக் கொண்டு உருவாகியிருக்கும் சிறந்த படங்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

நடிகர் சல்மான்கான்- அனுஷ்கா சர்மா நடிப்பில் 2016ஆம் ஆண்டு வெளியாகி, வசூல் சாதனை படைத்த 'சுல்தான்' படத்துக்கு 3 விருதுகள் வழங்கப்பட்டன. அதே போல், கிரிக்கெட் வீரர் சச்சினின் வாழ்க்கை வரலாற்றுப் படத்துக்கு இரண்டு விருதுகள் கிடைத்திருக்கின்றன.

சிறந்த இயக்குநருக்காக ஹெல்மர் ஜேம்ஸ் எர்ஸ்கினும், சிறந்த படத்துக்காக ரவி பக்ச்சாண்ட்காவும் பெற்றிருக்கிறார்கள். (ஐ)

# சிம்பாப்வேயை மடக்கி இறுதிக்குள் நுழைந்தது பங்களாதேஷ்

டாக்கா, ஜன. 24

முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் தொடரில் சிம்பாப்வே அணியை 91 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது பங்களாதேஷ்.

பங்களாதேஷ், இலங்கை, சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் தொடர் பங்களாதேஷில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் பங்களாதேஷ் - சிம்பாப்வே அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் அணி, முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அதன்படி தமிம் இக்பால், அனாமுல் ஹக்யூ தொடக்க வீரர்களாகக் களமிறங்கினார்கள். அனாமுல் ஹக்யூ ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து தமிம் இக்பாலுடன் ஷகிப் அல் ஹசன் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. தமிம் இக்பால் 76 ஓட்டங்கள் சேர்த்த நிலையிலும், ஷகிப் அல் ஹசன் 51 ஓட்டங்கள் சேர்த்த நிலையிலும் ஆட்டமிழந்தனர்.

அதன்பின் வந்த வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழக்க பங்களாதேஷ் அணியால் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 216 ஓட்டங்கள் மட்டுமே சேர்க்க முடிந்தது.

சிம்பாப்வே அணியின் கிரிமீயர் 4 விக்கெட்டுகளையும், ஜார்விஸ் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினார்கள்.

பின்னர் 216 ஓட்டங்கள் சேர்த்தால் வெற்றி என்ற இலக்குடன் சிம்பாப்வே அணி களமிறங்கியது. ஆனால் பங்களாதேஷ் வீரர்களின் அபாரப் பந்து வீச்சால் 125 ஓட்டங்களுள் சுருண்டது. இதனால், 91 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று பங்களாதேஷ் இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

'ஷகிப் அல் ஹசன் 3 விக்கெட்டுகளையும், மோர்தசா, சுன்சாமுல் இஸ்லாம், முஸ்டாபிஜூர் ஹர்மான் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினார்கள். (ஐ)



இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 24.01.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.